1975 மார்ச் 8]

அது 3-ம் தேதிக்குள் எல்லா எஸ்.ஈ. க்களுக்கும் போய்ச் சேர்ந்து விட்டது என்பதை நானே பார்த்துவிட்டேன். அங்கத்தினர்கள் கூறிய இந்த யோசனையால் மின்சார வாரியத்திற்கு வர வேண்டிய 7 கோடி ரூபாய் வருமானம் ஒண்ணே முக்கால் கோடியாகக் குறைந்து போய் விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு. கே. ரங்கநாதன் : இந்தத் திட்டங்கள் எப்போது முடி வடையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதற்கான முதல் தவணை இப்போது தான் வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் இந்தத் திட்டம் முடிவடைவதற்கு 2, 3 ஆண்டுகள் ஆகும்.

Graphite deposits

° 240 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether any experiment has been conducted by the Government in recent times to convert graphite into diamond; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Export of Aluminium cables

° 241 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether a large quantity of Aluminium cables have been airlifted from the Aluminium Industries in this State in February-March 1974; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இம் மாநிலத் திலிருந்து அலுமினிய கம்பிச் சுருள்களை விமானங்களில் ஏற்றிச் சென்றதுபற்றி அரசிடம் தகவல் எதுவுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.